**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 189/2015**
**U/s. 463,464(b),467,468,471,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 4 (LW.5)**

| | |
|---|---|
| **Name** : சரவணன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**1,2** எதிரிகள்ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 189/2015 13.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.40**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் வண்டிகாரதெருவில் குடியிருந்து பஜாஜ் ஷோரூம்மில் டீ வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் குற்ற எண் 543/2010 எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள (2) 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அசாஆ 5 , அசாஆ 6 , அசாஆ 7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழுங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2376 திருமதி. மோகனசுந்தரி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 19.09.2019 ம்தேதி காலை 9.00 மணியளவில் நான் சொந்த வேலையாக கரந்தை சென்று விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது மேற்கு காவல்நிலைய போலீசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்தாகவும், அப்போது கும்பகோணம் மார்க்கத்திலலிருந்து டாடா இண்டிகா கார் வேகமாக வந்ததாகவும், அந்த காரை மடக்கி பிடித்து சோதனை செய்ததில் மேற்படி காரிலிருந்த டிரைவர் , பின்னால் உட்காந்திருந்த நபரையும், கீழே இறங்கி விசாரித்து கொண்டிருந்ததாகவும், அதில் செல்வம் என்பவரை விசாரித்தபோது, தஞ்சாவூர் வந்து இரண்டு நகைகடைகளில், ஒன்று சிவசிதம்பரபிள்ளை நகை கடை, மற்றொன்று அவதார் ஜீவல்லர்ஸ் ஆகியவற்றில் இதே காரில் வந்து ரூ. 3,40,000/– நகைகளை கோலி மாஸ்டர், விசா கார்டுகளை பயன்படுத்தி ஏமாற்றி நகைகளை வாங்கி சென்றதாகவும், உடனே மேற்படி நபர்களை என் முன்பாகவும், கருணாகரன் என்பவர் முன்னிலையிலும் கைது செய்து அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும், பின்பு நாங்கள் அதில் சாட்சிகளாக கையெழுத்து

செய்ததாகவும், எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த பெருமாள் டாலர் கூடிய செயின் –1( 4 3/4 சவரன்), கைசெயின் –1 (4 சவரன்), 6.600 கிராம் வெள்ளை கல் பதித்த மோதிரம் –1 , 5.300 கிராம் பெருமாள் உருவம் பதித்த மோதிரம்– 1, பெருமாளின் அரை உருவம் பதித்த 8.900 கிராம் மோதிரம் ஆகியவற்றை காலை 10.00 மணியளவில் தயார் செய்து வைத்திருந்த கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து செய்ததாக என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.